**தென்பகுதி நெடுஞ்சாலை முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (எஸ்எச்ஐபி) - 2013**

தென்பகுதி நெடுஞ்சாலை முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் (எஸ்எச்ஐபி) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 1995 நவம்பர் 09 ஆந் திகதிய 8271- எஸ்ஆர்ஐ ஆம் இலக்க தொழில்நுட்ப உதவி கட்டமைப்பு வேலை உடன்படிக்கை ரீஏ இன் கீழ் இச் செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவர் மற்றும் அமுலாக்கல் முகவர்களாக முறையே முன்னாள் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சும் தற்போதைய நெடுஞ்சாலைகள், உயர்கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையும் (ஆர்டிஏ) உள்ளது. தென்பகுதி நெடுஞ்சாலையின் தொழில்நுட்ப, வர்த்தக நிதி பொருளாதாரம் மற்றும் மேற்பரப்பு அஸ்பற்றிடல் என்பன உள்ளடங்கலான சாத்தியவள கற்கை மற்றும் ஆரம்ப வடிவமைப்பு தயாரிப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் வீதி தயார்படுத்தல் வசதி செயற்திட்டம் என்பவற்றின் நெடுஞ்சாலை அபிவிருத்திக்கான நிறுவனரீதியான மற்றும் கொள்கை வடிவமைப்பு வேலைகள் மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் செயற்படுத்தல் என்பவற்றினை முன்னேற்றுவதே நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும். 2012 இல் யூஎஸ்.டொலர் 0.1 மில்லியன் ஒதுக்கீடு வழங்கப்பட்டதுடன் நிகழ்ச்சித்திட்டத்திற்கு உதவிபுரிவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியால் 2013 இல் ஆலோசனையாளர் குழுவொன்றை தெரிவுசெய்திருந்தது.

ஆலோசனையாளர்கள் 2013 இல் நிர்மாணம், தொழில்நுட்பம், நிறுவனரீதியான கொள்கை வடிவமைப்பு வேலையை வலுப்படுத்தல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றின் மீதான அறிக்கைகளும் 2014 இல் செயற்பாட்டுத் திட்டத்தை அமுலாக்குதல் மீதான அறிக்கைகளும் வழங்குவதற்கு வேண்டப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் ததுவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்**

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது ஒரு அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப்

பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் நன்கொடையளிக்கும் முகவர்கள் என்பவற்றின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்களானது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், ஆகும்.

## 3. அபிப்பிராயம்

--------------------

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) நிகழ்ச்சித்திட்டானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு காலப்பகுதிக்கான நிகழ்ச்சித்திட்டச் செலவினம் ரூபா 3,665,498 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினத்தின் பொழிப்பொன்றை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| விபரம் | 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக ஏற்பட்ட செலவினம் |
|---|---|
| | ரூபா |
| செயற்திட்ட முகாமைத்துவ செலவினம் | 3,566,528 |
| முற்பணங்கள் | 98,970 |
| | 3,665,498 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 130 மில்லியனிற்கு சமமான யூ.எஸ்.டொலர் 01 மில்லியன் மானியத்தில், மீளாய்வாண்டின் போது செய்யப்பட்ட ரூபா 7,932,990 இற்கு சமமான யூ.எஸ்.டொலர் 61,023 நேரடிக் கொடுப்பனவுகள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மேலும், குறைநிரப்பு ஒதுக்கீட்டின் கீழ் செய்யப்பட்ட ரூபா 45 மில்லியன் ஏற்பாடு 2013 ஆம் ஆண்டிற்கான நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சின் வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கில் செலவழிக்கப்படாத மீதியாக காட்டப்பட்டிருந்தது.

## 6. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| மூலம் | மானிய உடன்படிக்கையின் கீழ் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | | ஆண்டின்போது பயன்படுத்திய நிதிகள் |
|---|---|---|---|---|---|
| | யூ.எஸ்.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | யூ.எஸ்.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி – ரீஏ -8271 எஸ்ஆர்ஐ | 01 | 130 | 45 | 0.06 | 7.90 |
| இலங்கை அரசாங்கம் | - | - | 30 | - | 3.66 |
| | 01 | 130 | 75 | 0.06 | 11.56* |

* நிகழ்ச்சித்திட்டத்தால் நேரடிக் கொடுப்பனவுகள் பதிவு செய்யப்பட்டிருக்காமையால் பந்தி 4.1 இன் கீழ் காட்டப்பட்ட மீதியுடன் இந்த தொகை உடன்பட்டிருக்கவில்லை.

**6.2 ஆலோசனை சேவைகள்**

---------------------------------

ஆலோசனையாளர் குழு குறிப்புரைகளின் பிரகாரம், 2013 யூன் மாதத்திற்கு முன்னர் நிர்மாணம், தொழில்நுட்பம், நிறுவனரீதியான கொள்கை வடிவமைப்பு வேலையை வலுப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான அறிக்கை 2014 ஒக்தோபர் 31 வரையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.